**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 35** **நாள்: 10.04.2024**

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி இன்று (10.04.2024) தொடங்கியதைத் தொடர்ந்து, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஜார்ஜ் டவுன், பிரகாசம் சாலையில் உள்ள பாரதி மகளிர் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, திருவான்மியூர், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.ச.சுரேஷ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.மணிவண்ணன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 19.04.2024 அன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே பார்வையாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) உள்ளிட்ட வாக்குப்பதிவிற்குத் தேவையான இயந்திரங்கள் கணினி குலுக்கல் முறையில் வாக்குச்சாவடிகள் வாரியாக தேர்வு செய்யப்பட்டு அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வேட்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வடசென்னை மற்றும் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிகளில் 3 வாக்குப்பதிவு இயந்திரங்களும், மத்திய சென்னையில் 2 வாக்குப்பதிவு

இயந்திரங்களும் தேவைப்படுகிறது. இந்த துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் அரசியல் கட்சிகளின் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நடைபெற்றது. இந்தப் பணி இன்று முதல் 3 நாட்களுக்கு நடைபெறும்.

வாக்குப்பதிவிற்கு 11,843 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டுக் கருவிகள், 4,842 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) 20% முன்னிருப்பு (Reserve) உள்பட பயன்படுத்தப்படவுள்ளன.

வாக்குச்சாவடி வாரியாக 31 வேட்பாளர்கள் உள்ள மத்திய சென்னையில் 2 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 41 வேட்பாளர்கள் உள்ள தென்சென்னையில் 3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 35 வேட்பாளர்கள் உள்ள வடசென்னையில் 3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. வாக்காளர் தகவல் சீட்டுகள் இதுவரை 16.7 இலட்சம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 611 பதற்றமான (Vulnerable) வாக்குச்சாவடிகள், 23 சவாலான (Critical) வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும் 10 வாக்குச்சாவடிகளுக்கு மேலுள்ள 135 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 769 வாக்குச்சாவடிகளில் பணிபுரிய நுண் பார்வையாளர்கள் மற்றும் காவல்துறை பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஊழியர்களில் இதர மாவட்டங்களில் 6,760 நபர்கள், சென்னை மாவட்டத்தில் 7,965 நபர்கள், பாண்டிச்சேரியில் 10 நபர்கள் என 14,735 அரசு ஊழியர்களிடமிருந்தும், காவல் பணியாளர்களில் இதர மாவட்டங்களில் 14,533 நபர்கள், சென்னை மாவட்டத்தில் 4,538 நபர்கள், பாண்டிச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் 51 நபர்கள் என 19,122 நபர்களிடமிருந்தும் தபால் வாக்குகளுக்கான படிவங்கள் பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாத 85 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான 4,538 தபால் வாக்குகளில் இதுவரை 1003 நபர்கள் வாக்களித்துள்ளனர்.

தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் மூலமாக ரூ.14.73 கோடி, வருமான வரித்துறை சார்பில் ரூ.19.92 கோடி, மதுபானம் மற்றும் போதைப் பொருள் உள்ளிட்ட ரூ.59.33 இலட்சம் மதிப்பிலான பொருள்களும், கலால் துறை மூலமாக ரூ.1 கோடியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**